செ.வெ.எண்:03 நாள்:02.07.2021

# கரூர் மாவட்டத்தில் உணவுப்பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்த சலுகை

**கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வெளியிட்டுள்ளஅறிக்கை :** பாரத பிரதமரின் உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டம் **(Pradhan Mantri Formalization of Micro Food processing Enterprises Scheme - PMFME)** 2020 - 2021 ஆம் ஆண்டு முதல் 2024-2025 வரை 5 (ஐந்து) ஆண்டுகளுக்கு செயல்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது.இத்திட்டம் மத்திய அரசின் 60 சதவீதம் மற்றும் மாநில அரசு 40 சதவீதம் நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும். இத்திட்டம், **ஒரு மாவட்டத்திற்கு ஒரு விளைபொருள்** என்ற அணுகு முறையில் கரூர் மாவட்டத்தில் முருங்கை சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கு செயல்படுத்தப்படும். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் தனிநபர் அடிப்படையில் ஏற்கனவே உணவு பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறுநிறுவனங்களை வலுப்படுத்துதல் அல்லது புதிய நிறுவனங்கள் தொடங்குதல், குழு அடிப்படையில் பொது உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தருதல், வர்த்தக முத்திரை மற்றும் சந்தைப் படுத்துதல், தொழில் நுட்பப் பயிற்சிகள் போன்ற இனங்களுக்கு நிதி உதவி வழங்கப்படும்.

மேலும், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் போன்றவைகளுக்கும் நிதி உதவி வழங்கப்படும். சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனம், தகுதியான திட்ட மதிப்பீட்டில் 10 சதவீதம் தொழில் முதலீடு மற்றும் 90 சதவீதம் கடன் பெற்று அவற்றில் 35 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை மானியம் பெற வாய்ப்பு உள்ளது. வர்த்தக முத்திரை மற்றும் சந்தைப் படுத்துதலுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். மேலும் சிறுஉணவு பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு திட்ட அறிக்கையின் படி, தொழில் கடன்தொகை வங்கி மூலம் ஏற்பாடு செய்து தரப்படும்.இது தொடர்பாக மாவட்ட தொழில் மையம்,தோட்டக்கலை துறை, வேளாண்மைத்துறை மற்றும் வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) ஆகியோரை தொழில் முனைவோர்கள் தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.மேற்கண்ட திட்டத்தை கரூர் மாவட்டத்தில் செயல்படுத்த விண்ணப்பங்கள் பெறவும், திட்ட அறிக்கை தயாரிக்கவும் கரூர் மாவட்டத்திற்கு வளநபர் (Resource person) தேர்வு செய்யப்பட்டு பணியில் உள்ளார்.

கரூர் மாவட்டத்திற்க்கு 2021-2022 ம் ஆண்டிற்க்கு , தனிநபர் அடிப்படையில் ஏற்கனவே முருங்கை சார்ந்த உணவு பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறுநிறுவனங்களை வலுப்படுத்துதல் அல்லது புதிய நிறுவனங்கள் தொடங்குதலுக்கு **56 எண்ணிக்கை இலக்கு** பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயன் பெற விருப்பம் உள்ளவர்கள் மாவட்ட தொழில் மையம், தோட்டக்கலை துறை, வேளாண்மைத்துறை மற்றும் வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) அலுவலகத்திற்கு விண்ணப்பம் அளிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.மேலும் இத்திட்டம் தொடர்பான ஆலோசனைக்கு வள நபர் திரு.அபுபக்கர் சித்திக் , 9790856400 என்ற எண்ணிற்க்கு தொடர்பு கொண்டு பயன் பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.